# உங்கள் குழந்தையின் 2-ஆம் ஆண்டு உடல்நலப் பரிசோதனைக்கு முன்பாக

நீங்கள் வருவதற்கும் முன்பாக இணையதளத்திலுள்ள 'வளர்ச்சி நிலை குறித்த பெற்றோரது மதிப்பீடு' (Parent Evaluation of Developmental Status (PEDS)) எனும் மொழிபெயர்க்கப்பட்ட பிரதியினை www.mhcs.health.nsw.gov.au அச்சிட்டு, அதனைப் பூர்த்திசெய்து எடுத்து வாருங்கள், அல்லது உங்களது குழந்தையின் உடல்நலத் தாதியை உங்களுக்கு உதவுமாறு கேளுங்கள்.

உங்களது தாதி அல்லது மருத்துவரைப் பார்க்கச் செல்லும் முன்பாக உங்கள் குழந்தையைப் பற்றிய இக் கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

| **செவித்திறன்** | **ஆம்** | **இல்லை** | **உறுதியாய்த் தெரியவில்லை** |
|---|---|---|---|
| உங்கள் குழந்தையின் காது கேட்கும் திறன் குறித்து கவலைப்படுகிறீர்களா? | ☐ | ☐ | ☐ |
| ஒவ்வொரு வாரமும் புதிதாகச் சில வார்த்தைகளை உங்கள் குழந்தை கற்றுக் கொள்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| "பந்தை எடு" என்பது போன்ற சிறு உத்தரவுகளை நீங்கள் இடும் போது உங்கள் குழந்தை புரிந்துகொண்டு அதைப் பின்பற்றுகிறதா? | ☐ | ☐ | ☐ |
| நீங்கள் சொல்லும் போது உங்கள் குழந்தை மற்ற ஆட்களையோ, உடல் உறுப்புக்களையோ அல்லது பொம்மைகளையோ சுட்டிக் காட்டுகிறதா? | ☐ | ☐ | ☐ |
| வார்த்தைகளைத் தெளிவாய்ச் சொல்லாவிடினும், புதிய வார்த்தைகளைச் சொல்ல உங்கள் குழந்தை தொடர்ந்து கற்றுக் கொள்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| சாதாரணமான கதைகள் அல்லது பாடல்களை உங்கள் குழந்தை காது கொடுத்துக் கேட்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட வார்த்தைகளை இணைத்து சொற்றொடராக உங்கள் குழந்தை பயன்படுத்துகிறதா? உதாரணமாக: "இன்னும் கொஞ்சம் வேண்டும்" | ☐ | ☐ | ☐ |

**கண் பார்வை**

உங்கள் குழந்தையின் கண் பார்வை குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்களா?

உங்கள் குழந்தைக்கு நேரற்ற கண் (turned eye (Squint)) அல்லது
செயல்திறன் குறைந்த கண் (lazy eye (strabismus)) இருக்கிறதா?

சிறிய பொருட்களைப் பார்ப்பது உங்கள் குழந்தைக்குக் கஷ்டமாக இருக்கிறதா?

தமக்குப் பரிச்சயமான பொருட்களையும், நபர்களையும் தூரத்திலிருந்து உங்கள் குழந்தை அடையாளம் கண்டுகொள்கிறதா?

குடும்பத்தில் யாருக்காவது பார்வைக் கோளாறுகள் இருக்கின்றனவா?

**முடிவு** ☐ சாதாரணமானது ☐ பார்க்க வேண்டியவர் ☐ மீளாய்வு

# 2 வருடங்கள் ஆகியுள்ள போது யோசிக்க வேண்டிய விடயங்கள்

- குழந்தைப் பாதுகாப்பு, மேற்பார்வை மற்றும் மாறிவரும் உடலியக்கம்
  (Child safety, supervision and changing mobility)
- வீட்டு உணவு (Family diet)
- உறக்கம்/இரவில் நடத்தல்
- பொறுமையிழந்து கத்துதல், கோபத்தினை வெளிப்படுத்தல் (Temper tantrums)
- உடன்பிறந்தோருடனான பிரச்சினைகள் (Sibling issues)
- புகைப்பிடித்தல்
- பிள்ளைவளர்ப்பு முறைகள், உதாரணமாக, ஒழுக்கப்படுத்தல், வரையறைகளை ஏற்படுத்தல்
- கழிவறைப் பயிற்சி
- பற்களுக்கான பாதுகாப்பு
- சூரிய ஒளியிலிருந்து பாதுகாப்பு
- குழந்தை கவனிப்பு/விளையாட்டுக் குழுக்கள் (Child care /play groups)
- தன்னைத் தானே அமைதிப்படுத்திக் கொள்ளும் பழக்கங்கள், உதாரணமாக, கட்டைவிரல் சப்புதல், பிடித்தமான பொம்மைகள்
- தடுப்பு மருந்திடல்
- பேச்சு மற்றும் மொழி
- குடும்ப ஆதரவு மற்றும் இதர பிரச்சினைகள்